சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

1

செய்திமடல் - 52 | 24-05-2012

17-05-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : இலங்கையில் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள்

இலங்கையில் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள் கணிசமான அளவு இருக்கின்ற போதும் அவற்றை அமுல்படுத்துவதில் அரச இயந்திரம் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. குறித்த சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக மக்களிடம் காணப்படும் அறியாமை அரச இயந்திரம் மொழி தொடர்பான சட்ட ஏற்பாடுகளின் அமுலாக்கம் தொடர்பில் தொடர்ந்து கரிசனையின்றி இருப்பதனை ஊக்குவித்துள்ளது.

### மொழி தொடர்பான சட்ட ஏற்பாடுகள்

இலங்கையில் மொழிகள் தொடர்பான ஏற்பாடுகள், அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பின் (IV)ம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தினாலும் (1987ம் ஆண்டு) 16வது அரசியலமைப்புத் திருத்தத்தினாலும் (1988) திருத்தப்பட்டுள்ளன.

மொழி உரிமை ஓர் அடிப்படை உரிமையென்பது அரசியலமைப்பின் (III)ம் அத்தியாயத்தில் 12(2)வது பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் இனம், மதம், சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்தவொரு காரணமாகவும் எந்த பிரச்சினைக்கும் ஓரங் காட்டுதல் ஆகாது என கூறப்பட்டுள்ளது.

### அரச கரும மொழிகள்

சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் அரசகரும மொழிகளாதல் வேண்டும். அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தால் திருத்தப்பட்ட 18(1) மற்றும் 18(2) உறுப்புரைகள்

தேசிய மொழிகள் உறுப்புரைகள் இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும் -19ம் உறுப்புரை

### இணைப்பு மொழி

ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும். அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தால் திருத்தப்பட்டவரான 18(3) உறுப்புரை

### கல்வி கற்கும் மொழி

ஆள் ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்-21(1) உறுப்புரை

ஆயினும் தேசிய மொழியல்லாத ஒரு மொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கின்ற ஓர் உயர் கல்வி நிறுவனத்துக்கு இப்பந்தியின் ஏற்பாடு ஏற்புடையனவாதலாகாது - 21(1) உறுப்புரை

### நிருவாக மொழி

சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழிகளாக இருத்தல் வேண்டும் - அரசியல் அமைப்பிற்கான 16வது திருத்தத்தால் திருத்தப்பட்டவரான 22(1) உறுப்புரை

பகிரங்க நிறுவனங்களினால் பொதுப்பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அலுவல்கள் யாவும் கொண்டு நடத்தப்படுதலில், வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்கள நிருவாக மொழியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பொதுப்பதிவேடுகளைப் பேணி வருவதற்காகவும் பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடத்தப்படுவதற்காகவும் சிங்கள மொழி பயன்படுத்தப்பட வேண்டும் :- அரசியலமைப்புக்கான 16வது திருத்தத்தால் திருத்தப்பட்டவரான 22(1) உறுப்புரை

ஆயின் உதவி அரசாங்க அதிபரின் பிரிவொன்றை உள்ளடக்கும் கூறு எதனதும் மொத்தச் சனத்தொகையில் சிங்கள அல்லது தமிழ் மொழிவாரியான சிறுபான்மைச் சனத்தொகை என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ, அதனைக் கருத்திற் கொண்டு சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அல்லது அத்தகைய இடப்பரப்பு அமைந்திருக்கக்கூடியதான மாகாணத்தில் நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் மொழி தவிர்ந்த ஒரு மொழி, அத்தகைய இடப்பரப்புக்கான நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படலாம் எனச் சனாதிபதி பணிக்கலாம் :- அரசியலமைப்புக்கான 16வது திருத்தத்தால் திருத்தப்பட்டவரான 22(1) ஆம் உறுப்புரை

### இரு மொழிப் பிரதேச செயலகங்கள்

இதற்கிணங்க பின்வரும் 29 பிரிவுகள் இருமொழிப் பிரதேசசெயலகப் பிரிவுகளாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மிகுதி அடுத்த பக்கம்..



மிகயில் ஷோலகவ்

மிகயில் ஷோலகவ் (Michail Aleksandrovich Sholokhov),( May 24 [O.S. May 11] 1905 - February 21, 1984) சோவியத் ரஷ்யாவின் முக்கிய நாவலாசிரியர்களுள் ஒருவராவார். இவரது "டொன் நதி அமைதியாக ஓடுகிறது" (And Quiet Flows the Don) நாவலுக்கு 1965-இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவருக்கு லெனின் பரிசைப் பெற்றுத்தந்த நாவலான கன்னிநிலம் (Virgin Soil Upturned) தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவரது நூல்கள்:

1. And Quiet Flows the Don
2. The Don Flows Home to the Sea
3. Fierce and Gentle Warriors
4. Harvest on the Don
5. Mikhail Sholokhov: Short Stories
6. They Fought for Their Country, a Novel: The Fate of a Man, a Story
7. Virgin Soil Upturned

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையில் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள்

முன் பக்கத் தொடர்ச்சி...

**பதுளை மாவட்டம்** - பதுளை, பண்டாரவளை, எல்ல, ஹல்துமுல்ல, ஹாலிஎல, அப்புத்தளை, லுணுகல, மீகஹாகிவுல, பசற, சொரணதொட்ட, வெலிமட.

**கொழும்பு மாவட்டம்** - கொழும்புஇ திம்பிரிகஸ்யாய

**களுத்துறை மாவட்டம்** - பேருவல

**கண்டி மாவட்டம்** - அக்குரண, தெல்தோட, பன்வில, பஸ்பாகேகோறள, உடப்பலாத்த

**நுவரெலியா மாவட்டம்** - அம்பகமுவ, ஹங்குரன்கெத, கொத்மல, நுவரெலியா, வலப்பனை

**புத்தளம் மாவட்டம்** - கல்பிட்டி, முந்தல், புத்தளம், வனாத்தவில்லு,

**காலி மாவட்டம்** - காலி, கடவத்தசத்தர,

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்காலத்தில் இருமொழிப் பிரிவுகளாக 43 பிரதேச செயலாளர் பிரிவுகள் இடம்பெற உள்ளன.

**கடிதப்பரிமாற்றம் செய்தல் மற்றும் ஆவணப்பிரதி பொழிப்பு அல்லது மொழிப் பெயர்ப்பு ஆகியவற்றை பெற்றுக் கொள்ளுதல்**

சிங்கள மொழி நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடப் பரப்பில் ஆளொருவர் (அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் அலுவலரொருவர் நீங்கலாக) பின்வருவனவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அலுவலர் என்ற தன்மையில் எவரேனும் அலுவலரிடமிருந்து செய்தித் தொடர்புகள் பெறுவதற்கும் அந்த அலுவலருடன் தொடர்பு கொள்வதற்கும் அவருடன் அலுவல் கொண்டு நடாத்துவதற்கும்.

ஏதேனும் அலுவலக முறையான இடாப்பை, பதிவேட்டை, வெளியீட்டை அல்லது வேறு ஆவணத்தைச் சோதனை செய்வதற்கு அல்லது பொழிப்புக்களை எடுப்பதற்கு அவருக்குள்ள உரிமையை சட்டம் ஏற்றுக்கொண்டால், ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அத்தகைய இடாப்பிலிருந்து, பதிவேட்டிலிருந்து, வெளியீட்டிலிருந்து அல்லது வேறு ஆவணத்திலிருந்து பிரதியொன்றை அல்லது பொழிப்பொன்றைப் பெறுவதற்கும் அல்லது விடயத்திற்கேற்ப மொழி பெயர்ப்பொன்றை பெறுவதற்கும் அத்துடன் அவருக்கு வழங்கப்படும் நோக்கத்துக்கென ஆவணமொன்று எவரேனும் அலுவலரினால் எழுதி நிறைவேற்றப்படுமிடத்து ஒன்றில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அத்தகைய ஆவணத்தை அல்லது அதன் மொழிப் பெயர்ப்பைப்பெறுவதற்கும் (அரசியலமைப்புக்கான 16வது திருத்தத்தால் திருத்தப்பட்டவரான உறுப்புரை 22(2)

தமிழ் மொழியானது நிருவாக மொழியாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடப்பரப்பில் ஆளொருவர் (அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும் அலுவலலொருவர் நீங்கலாக) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ),(ஆ) அத்துடன் (இ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைகளைப் பிரயோகிப்பதற்கும் சேவைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். (அரசியலமைப்புக்கான 16 ஆம் திருத்ததினால் திருத்தப்பட்டவரான உறுப்புரை 22(3))

**மொழி உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படக்கூடிய இடங்கள்**

1. உயர்நீதிமன்றத்திலிருந்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளல்.

126(I) ஆம் உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்படக் கூடிய விண்ணப்பம்

126(I) ஆம் உறுப்புரைக்கியங்க III ஆம் அல்லது IV ஆம் அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்டது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் அடிப்படை உரிமையானது அல்லது மொழி உரிமையானது ஆட்சித் துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை ஏதேனும் பிரச்சினையை விசாரனை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டுள்ளது.

2. 1991 ம் ஆண்டின் 18ம் இலக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஒருவர் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை முன்வைத்தல் மூலம்

3. நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிடமிருந்து (ஒம்புட்ஸ்மன்) பரிகாரம் பெறுதல்.

4. மனித உரிமை ஆணைக்குழுவிடமிருந்து நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளல்.

**தம்புள்ள பிரச்சனையும் இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள மத முறுகல் நிலையும்.**

**இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு**

1. போருக்குப் பின் இலங்கையில் பரவலாகி வரும் பௌத்த அடிப்படைவாதம்.

2. முஸ்லிம், இந்து,கிரிஸ்தவ மதத் தலங்களின் மீது நிகழும் பௌத்த ஆக்கிரமிப்புக்கள்.

3. தம்புள்ளைப் பள்ளிவாயல் ஆக்கிரமிப்பு உள்ளிட்ட அண்மைய நிகழ்வுகள்,

4. அவை பற்றிய அரசின் அசமந்தமான பௌத்த சார்பு நிலை.

From the Draw The Line street art Festival.



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA